நாள் - 14.10.2025

**STC. No.**46/2025

**ம.சா.**1 மகாலிங்கம், த/பெ. கந்தசாமி கவுண்டர்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act**, 1969 (**Central Act** 44 **of** 1969) **on the** 14$^{th}$ **day of October** 2025.

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் இன்று குறுக்கு விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு காட்டம்பட்டி இந்தியன் வங்கியில் வங்கி கணக்கு உள்ளது. தற்பொழுதும் எனக்கு காட்டம்பட்டி இந்தியன் வங்கியில் கணக்கு உள்ளது. காசோலை எண். 080782 பெடரல் வங்கி, ஆலந்துறை கிளை காசோலை ரூபாய் 25 லட்சத்திற்கு கொடுத்தார். மேலும் கடனாக வாங்கிய 25 லட்சம் அதனை தவிர்த்து வேறு எந்த பரிவர்த்தனைகள் குறித்தும் நான் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியின் மனைவி விஷ்ணுபிரியா அவர்களை எனக்கு தெரியும். விஷ்ணு பிரியா அசோசியேட்ஸ் என்பது எதிரியின் மனைவி நிறுவனம் என்றால் சரிதான். எனது மனைவியின் பெயர் மணிமொழி என்றால் சரிதான். எனது மனைவியின் ஒன்றுவிட்ட சகோதரரின் மகன் அஸ்வத்கிரண் என்றால் சரிதான். அஸ்வத் கிரணின் தந்தை துரை என்றால் சரிதான்.

2. 20.01.2022 ம் தேதியன்று எதிரியின் மனைவி நடத்தி வரும் விஷ்ணு பிரியா அசோசியேஷன் வங்கி கணக்கிலிருந்து எனது வங்கி கணக்கிற்கு ரூபாய் 5 லட்சம் பணம் வந்துள்ளது என்றால் சரிதான். நான் அவரிடம் கொடுத்த தொகையினை அவருக்கு அவர் எனக்கு அவரது நிறுவனத்தின் மூலம் எனக்கு அனுப்பினார் .நான் எதிரியின் மனைவி விஷ்ணு பிரியா அவர்களுக்கு சொல்லி அவர் அஸ்வத் குமார் அவர்கள் வங்கிக் கணக்கிற்கு ரூபாய் 13 லட்சம் அனுப்பினார் என்றால் அது சம்பந்தமாக எனக்கு தெரியாது. நான் வழக்கறிவிப்பில் அவசர குடும்ப மற்றும் கட்டிட அபிவிருத்தி செலவிற்காக என குறிப்பிட்டுள்ளேன். அவசர குடும்ப அபிவிருத்தி என எதை சொல்கிறேன் என்றால் கட்டிட அபிவிருத்திக்காகவும் கேட்டார். அதை தான் அவ்வாறு சொல்லியுள்ளேன்.

3. குடும்ப அபிவிருத்தி மற்றும் கட்டிட அபிவிருத்திக்காக எவ்வளவு மாதத்தில் பணம் கொடுத்து விடுவதாக குறிப்பிட்டு ஏதேனும் ஆவணம் எழுதிக் கொடுத்தாரா என்றால் என்னிடம் அவரது சொத்து ஆவணங்களை கொடுத்தார். நான் சொத்து ஆவணங்கள் வேண்டாம், காசோலை மட்டும் போதும் என சொல்லி சொத்து ஆவணங்களை திரும்ப அளித்து விட்டேன். காசோலை மட்டும் வாங்கிக் கொண்டேன். blank cheque ஒன்று கொடுத்தார். அதனையும் நான் திரும்ப

கொடுத்து விட்டேன். வழக்கு காசோலை மட்டும் போதும் என blank cheque திரும்ப கொடுத்து விட்டேன். ரூபாய் 25 லட்சம் என வழக்கு காசோலையில் யார் எழுதினார்கள் என்றால் எதிரியை என் கண்முன்னாக எழுதினார். எதிரி எனக்கு ரூபாய் 25 லட்சம் கொடுத்திருந்து நான் எதிரிக்கு ரூபாய் 25 லட்சம் கொடுத்திருந்தால் அதை எதிரிக்கு நான் திரும்ப கொடுத்ததாக எடுத்துக் கொள்ளலாம் என்றால் சரிதான், ஆனால் எதிரி எனக்கு எந்த தொகையும் கொடுக்கவில்லை.

4. 04.04.2022 to 28.12.2023 தேதி வரை எதிரி எனக்கு வங்கி மூலமாக ரூ.24,68,000/- அனுப்பி உள்ளார் என்றால் சரியல்ல. எனது மகள் மோகன ரூபினி எங்கள் வீட்டில் இருந்து வருகிறார். எனது மகள் மோகன ரூபினி திருமணம் நடைபெற்று கடந்த ஒரு வருடமாக எங்கள் வீட்டில் இருந்து வருகிறார். ஸ்ரீ சந்துரு கிருஷ்ணன் என்பவர் அவருக்கு நான் ரூபாய் 20 லட்சம் தர வேண்டி தெரிவித்து என் மீது வழக்கு கோவை நீதிமன்றத்தில் அசல் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். அந்த வழக்கிற்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. எனக்கு பொள்ளாச்சி பெரிய கலந்தை கிராமத்தில் 13 ஏக்கர் நிலத்தில் 5.70 ஏக்கர் நிலம் இருந்தது. கடனுக்காக தொகை பெற பாலகுமார் என்பவரிடம் கிரையம் செய்து கொடுத்து கடனாக பணம் பெற்றுள்ளேன். மேற்படி கடனுக்காக வாங்கிய தொகையையும் பாலகுமாரிடம் திரும்ப செலுத்தி விட்டேன்.

5. எந்த தேதியில் நான் பாலகுமார் அவர்களிடம் மேற்படித்தொகைகளை கொடுத்தேன் என்றால் ரொக்கமாக அவர் எனது வீட்டில் வந்து வாங்கிச் சென்றார். தேதி, ஞாபகம் இல்லை. அதற்காக நான் ரசீது எதுவும் பெறவில்லை. மேற்படி நான் கடனுக்காக கிரையம் செய்து கொடுத்த பூமி தற்போது பாலகுமார் அவர்களின் பெயரில் இல்லை என்றால் சரிதான்.நான் மேற்படி 13 ஏக்கர் பூமியினை ஈடுகாட்டி கார்ப்பரேஷன் வங்கி, பொள்ளாச்சி கிளையில் ரூபாய் 20 லட்சம் கடன் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வங்கியில் வாங்கிய கடன் ரூபாய் 20 லட்சத்திற்கு நான் மாதத் தவணை செலுத்தாமல் இருந்ததால் NP ஆகிவிட்டது என்றால் சரிதான். நான் வங்கியில் பணம் திரும்ப செலுத்தாமல் இருந்ததால் பாலகுமார் என்பவர்தான் மேற்படி வங்கிக்கு நான் செலுத்த வேண்டிய தொகையான ரூபாய் 20 லட்சம் மற்றும் அதனுடன் சேர்த்து இதர தொகைகளையும் செலுத்தினார் என்றால் அவர் என்னிடம் பணம் கொடுத்தார். நாங்கள் இருவரும் சென்று பணம் கட்டினோம்.

6. அதன் பின்பு 5.70 ஏக்கர் நிலத்தினை நான் பாலகுமார் அவர்கள் பெயரில் கிரையம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். பாலகுமார் மற்றும் சக்திவேல் இருவரும் நண்பர்கள் என நான் கருதி உள்ளேனா என்றால் நண்பர்களாகத்தான் இருந்தார்கள். என்னிடமிருந்து பாலகுமார் வாங்கிய ஐந்து புள்ளி 70 ஏக்கர் நிலத்தினை கார்த்திகேயன் என்பவர் பெயருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி கார்த்திகேயன் அவர்கள் பெயரில் செய்து கொடுத்த கிரைய ஆவணத்தை ரத்து செய்யும்படி எதிரி சக்திவேல் அவர்கள் மூலமாக பாலகுமார்

அவர்களிடம் அணுகினேன் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு ரூபாய் ஒரு கோடியே 5 லட்சம் கடன் பெற்று வெளிநபர்களிடமிருந்து தருவதாக தெரிவித்து நான் எதிரியிடமிருந்து 080781 To 080786 என மொத்தம் ஆறு காசோலைகள் வாங்கி வைத்திருந்தேன் என்றால் சரியல்ல.

(நீதிமன்ற நேரமின்மையின் காரணமாக குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.10.14 18:00:53 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**